**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**
**S.C.No. 171/2012**
**Prosecution Witness P.W. 12**
.....

Name : திரு. S.வேல்முருகன் Calling :
Father's name : திரு. சக்கணன் Religion :
Village : Age :
Taluk :

நாள் - **05.08.2025**

**(எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை:**

நான் தற்போது மதுரை திருமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் மதுரை தலைமை பிரிவில் ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.07.2010 ம் தேதியன்று காலை சுமார் 9.00 மணிக்கு திருமங்கலத்தில் இருந்து செக்கானூரணி செல்வதற்கு TN 58N 0835 என்ற பதிவெண் கொண்ட அரசுப்பேருந்தை டிரிப் எடுத்து சென்ற போது, மொட்டப்பாறை என்ற இடத்தில் பேருந்து சென்று கொண்டிருந்த போது, வலதுபுறத்தில் ஒரு நபர் எங்கள் வண்டி செல்வதை பார்தது ஒரு கல்லை எடுத்து எறிந்ததில் வண்டியின் பின் கண்ணாடி சேதம் அடைந்தது. கல் வீசிய நபரின் பெயர் தெரியாது. என்னுடைய வண்டி சேதம் அடைந்தது. இதுசம்பந்தமாக நிர்வாகத்திற்கு நான் தகவல் சொன்னேன். செக்கானூரணி காவல்நிலையம் சென்று புகார் கொடுக்க சொன்னார்கள். என்னுடன் செக்கிங் இன்ஸ்பெக்டரும் வந்தார். சம்பவம் குறித்து செக்கிங் இன்ஸ்பெக்டர் புகார் கொடுத்தார். காவல்துறையினர் என்னை விசாரித்தனர்.

**குறுக்குவிசாரணை**

எனது வாக்குமூலத்தில் CI தலைமையில் தான் பேருந்தை இயக்கினோம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 14.07.2010 ம் தேதி CI தலைமையில் தான் நாங்கள் போனோம், அப்போது CI திருமங்கலம் பஸ்ஸ்டாண்டில் இருந்தார். மேற்படி சம்பவமானது எங்கு நடந்தது என்றால் மொட்டைப்பாறையில் நடந்தது. மொட்டப்பாறை என்பது செக்கானூரணியில் இருந்து சுமார் 6 கி.மீ முன்பாக

உள்ளது. மொட்டைப்பாறையிலேயே எனது பேருந்தை நிறுத்திவிட்டு அங்குள்ள காவல்துறையினரிடம் நான் தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். சம்பவத்தன்று நான் புகார் கொடுத்த போது போலிசார் என்னை விசாரித்தார்கள், அதன்பிறகு இன்று வரை என்னை போலிசார் விசாரிக்கவில்லை. போலிசார் விசாரணையிலும், எனது மேலதிகாரி விசாரணையிலும் மேற்படி சம்பவமானது மொட்டைபாறையில் தான் நடந்தது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

Sd./-xxxxx

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.